**சுருக்கம்**

பேரூந்து நிலையம் - ஒசூர் நகராட்சி - ரூ.689.79 இலட்சம் செலவில் பேரூந்து நிலையம் அபிவிருத்திப் பணிகள் - நிர்வாக அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4)துறை**

அரசாணை(ப)எண்.82 நாள்:6.3.2007

பார்வை:

நகராட்சி நிர்வாக ஆணையர், Roc .எண்.35368/2006/P3, நாள் 12.2.2007.

---

ஆணை:

பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக ஆணையர், ஒசூர் நகராட்சி பேரூந்து நிலையத்தை ரூ.689.79 இலட்சம் செலவில் அபிவிருத்தி செய்ய நிர்வாக அனுமதி அளிக்கும்படி அரசை கோரியுள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பை அரசு நன்கு பரிசீலனை செய்து, அபிவிருத்தி செய்யப்படவுள்ள பேரூந்து நிலையத்தில் கட்டப்படவுள்ள கடைகளில் 75% முன் ஏலம் விடப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன், ஒசூர் நகராட்சி பேரூந்து நிலையத்தை ரூ.689.79 இலட்சம் செலவில் அபிவிருத்தி செய்ய நிர்வாக அனுமதி அளித்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.தீனபந்து,
அரசு செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5
நகராட்சி ஆணையர்,
ஒசூர் நகராட்சி,(நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக)

நகல்:

ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு செயலாளரின் நேர்முக உதவியாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை-9.

// ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.